கர்பம் பற்றிய குறிப்புகள் [illegible].

462. அநுபவவைத்தியம்.

புத்தகமாக்கலாம்.

[illegible]
24/2/09

அநுபவ வைத்தியம்

செய்யுள் 318 முதல் 367 வரை தொடர்ச்சியாக உள்ளன.

மகோதரம், சூலை, குன்மம், காமாலை, அதிசாரம், பீலிகை
நீரடைப்பு முதலான வியாதிக்கு மருந்து.

318.

உள்ளி, சாரணைவேர், சிவனதவேர்
முள்முருங்கைவேர், சித்திரமூலம்வேர், இவை ஐந்தும்
வகைக்கு பலம் 10. இடித்து கத்தரித்து வைத்து குமரிநீர்
விட்டுப் பிசைந்து எடுத்து முன்னெயொன்றாகக் காய்ச்சி
சுக்கு ஆனைத்திப்பிலி, ஓமம், விளாம்பட்டை, வெட்
பாலையரிசி திரிமூலகம், சாரணைவேர், சேவியம்,
சதகுப்பை, இந்துப்பு, ஏலம் இவை வகைகளுக்கு
கழஞ்சு-2 அந்த கசாயம் விட்டரைத்து இதுக்கு
சித்தாமணக்கெண்ணெய் நாழி உரி வார்த்து அதின் பாதி
சதுரக்கள்ளிப்பாலு ஆழாக்கு இவையெல்லாம் மூன்று
நாள் காய்ச்சி தயிலமான பதத்தில் எடுத்துக் கொண்டு
நாளொன்றுக்கு கழஞ்சு தயிலம் உள்ளுக்கு கொடுக்க
தீரும். மகோதரம், சூலை குன்மம், காமாலை, வாதகுன்மம்,
அதிசாரம், பீலிகை, நீரடைப்பு ஆமைசிலை முதலான வியாதியும்
தீரும்.

பொன்னாங்காணி லேகியம்

பொன்னாங்காணிச் சாறு படி-3, முசுமுசுக்கைச்சாறு படி 1, நிந்தாமுட்டி வேர், உவரு கிரந்தி, பற்பாடாகம் இவை மூன்றும் கஷாயம் படி 5, பசும்பால் படி 2 இதுவெல்லாம் காய்ச்சி குளம்பாளான் சர்க்கரை சேர் 1 சீரகம் பலம் 1, ஏலம் பலம் 5 வறுத்துப் பொடி பண்ணிப் போட்டு நெய்
319. ஒரு படி விட்டு கிளறிப் பின்னைக் காலையு கொள்ளவும் மேகம், உஷ்ணம், மார்பு நோவு, ஈளை, பயித்திய சந்தம், உட்காய்ச்சல் இவையெல்லாந் தீரும்.

மந்த சேத்துமத்துக்கு சூரணம்

இலவங்கம் வரை-2, ஏலம் வராகனிடை 4, கோதுமை அரிசி வராகனெடை 8, உகை நீறு வராகனிடை 8, திப்பிலி வராகனிடை 16, அதிமதுரம் வராகனிடை 32, முசுமுசுக்கைச்சாறு உலர்த்தினது வ 15 இவையெல்லாம் சூரணம் பண்ணி இந்த பங்குக்கு ஒரு பங்கு சர்க்கரை கலந்து தேன், நெய், வெண்ணெயில் கொள்ளவும் தீரும் வியாதி மந்த சேத்துமம், உட்சுரம், வெட்டை அக்கினிமந்தம் இவையெல்லாம் குணம் அடையும்.

சக்கர மூத்ராதி ரசாயனம்

முருங்கைப்பூ, தாதுமாளம்பூ, வாழைக்
கிழங்கு, பூமிசக்கரைக் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு,
சுத்தி சாரணைக்கிழங்கு, மருவரத்தினம், சிவதைவேர்
நற்பாலைவேர், சிறுநெருஞ்சிவேர், அதின்காய் வேரை
சிறுக்கீரைவேர், முக்கரசு, சுணைக்காலி வேரை
முருங்கைப்பிஞ்சு வேரை அமுர்த வள்ளி, சர்க்கரைவள்ளி,
தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, ரசவள்ளிக்கிழங்கு,
அருக்கராக்கிழங்கு, பூவரசன் வேரை நல்வன் வேரையும்
மாவின் நீர்முள்ளி வேரை, முசுட்டை வேரை, நாய்வேளை
வேரை, கருசூரை வேரை, உசலை வேரை அடலாவேருது ஆக
-30 வகையும் உலர்த்தி சூரணம் பண்ணி கடைசரக்கான
320. அதிமதுரம், செங்கழுனி, கோட்டம், சமுத்திரா சோகி
வேரை, சிறுநாகப்பூ, ஏலம், சன்ன லவங்கப்பட்டை
லவங்கபத்திரி லவங்கம், சாதிக்காய் பத்திரி, முந்திரி
பழம், பேரீச்சம்பழம், கோரோசாணி ஓமம் காமப்பு
சீரகம், கருஞ்சீரகம், தேசாவரம், சதகுப்பை, தாளிச
பத்திரி, பூலாங்கிழங்கு, விலாமிச்சவேர், கற்கடக
சிங்கி, மாசிக்காய், நெல்லிவரை, கடலை, கோதும்மை
உளுந்து கொத்தமல்லி ஆக சரக்குகள் 27. இவற்றை
இளவறுப்பாக வறுத்து சூரணம் பண்ணி இதுக்கு கூட
பங்கு கற்கண்டு முத்தின தேங்காய்ப்பால்படி - 1
பசுவின்பால்படி 1 இவை இரண்டும் ஒன்றாய்

காய்ச்சி கற்கண்டு பொடி போட்டுக் காய்ச்சி கம்பி பதத்தில் பசுவின் நெய்விட்டு சூரணம் எல்லாம் தூவிக் கிளறி தேன்விட்டுக் கிளறி 12- நாள் தானியப்புடம் வைத்து எடுத்து தான்றிக்காய் அளவு கொள்ளவும். தீரும் வியாதி மேகம் 20, நாதநட்டம், வீரியவர்த்தி பெலமுண்டாம். பலன் உண்டாகும். கைகண்டமுறை

கிரந்தி சூலை உஷ்ணத்துக்கு எண்ணெய்

நல்லெண்ணெய்படி 1, எலுமிச்சம் பழச்சாறுபடி 1, நல்ல சீரகம் பலம் 1 ஏலம் பலம் 5 லவங்கம் பலம் ¼, சாதிக்காய் விராகனிடை 2 சாதிப் பத்திரி விராகனிடை குங்கிலியம் விராகனிடை 10 சுத்தி பண்ணி எல்லாம் அரைத்து வெங்காரம் விராகனிடை 2 பொரித்து எண்ணெயில் போட்டு கலந்து வைத்துக் கொண்டு 7 நாள் வாங்கவும். கிரந்தி, சூலை, உஷ்ணம் இவையெல்லாம் தீரும். உப்பு புளி நீக்கவும்.

௩௮. ## வெள்ளை ஒழுக்குக்கு மருந்து

கடுகு பலம் அரைத்து மூன்றுநாள் வாங்கவும். பற்பமாகத் தட்டி உப்புப் போட்டு மறுநாள் வெள்ளாட்டுப் பாலில் பாவித்து

சர்க்கரை நல்லசீரகம் போட்டு மூன்றுநாள் உலர்த்தவும். எலுமிச்சன் பழச்சாறு வெங்காரம், பொரித்து நல்லெண்ணெயில் உலர்த்த வெள்ளை ஒழுக்கு தீரும்.

பெருநாக கிருதம்

பெருமரப்பட்டை பலம் 50 இடித்து தண்ணீர் விட்டு எட்டொன்றாக்கி காய்ச்சி வடித்து இதில் நல்லெண்ணெய் பலம்-4 போட்டுக் காய்ச்சி சித்தரத்தை பலம்-1 ஏலம், லவங்கம், சாதிக்காய், அதிவிடயம், ஏலம்பாசின், குரோசாணி ஓமம் இவை வகைக்கு வராகனிடை 3 ஓமம் பலம்-௫ - இவையெல்லாம் இடித்து சூரணம் பண்ணி பால்பப்பழம் நாரதம் பலம்-10 இது அந்த பாகில் சூரணம் பழுத்து உண்ண எல்லாம் சேர்க்கிளறி ஆறவிட்டு அரைப் படி தேன் விட்டுக் கிளறி பக்குவமாய் கொள்ளத் தீரும் வாந்தி மூலக்கிராணி, கடுப்பு, அதிசாரம், அசீரணம், சூலை, பிரமேகம், உஷ்ணம், எரிவின்மை இவையெல்லாந் தீரும்.

பஞ்சகவ்வியக் கிருதம்

பசுவின் சாணி பிழிந்த சாறு 1, கோமூத்திரம் 2, நெய் 4, தயிர் 5, பால் 3, வில்வரைச் சாறு 4, சீதேவியார் செங்கழுநீர்ச் சாறு, நெருஞ்சிலைச்

சாறு - 1, செவ்விளநீர் 2, அதிமதுரம், சந்தனம்,
செங்கழுநீர்க்கிழங்கு, வெட்டிவேர், கோரோசனை,
தாளிசப்பத்திரி, கொத்தமல்லி, சீரகம், ஏலம், கருஞ்
சீரகம் இவை வகைக்கு கழஞ்சு 2 பொடி செய்து
322 அதில் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து நாளு
முக்கழஞ்சு நெய் கொள்ளவும் தீரும் நோயாவது உடம்பு
எரிகைகால் எரிவு எரிவது, நாக்கு உதடு வெந்து இதழ்
வெடித்தலும் க்ஷயம், அஜீரணம், மாறல், வாதசுரம், வாத
பாகம், மருந்தீடு, மலபந்தம், காமாலை, பயித்தியம் பித்தம்,
உள்காய்ச்சல், எலும்புருக்கி பெரும்பாடு இவை தீரும்.

சித்திரமூலக் கிருதம்

சித்திரமூலம் பத்துபலம் நறுக்கி
இடித்து நாலு படி தண்ணீர் விட்டு ஒரு படியாகக்
காய்ச்சி வடித்து நிலகடுகு நிலப்பனை வாலுளுவரிசி
தேவதாரம், கொத்தமல்லி, வசம்பு, நெருஞ்சிவேர் காயம்
அத்திமரத்துக் காதான சித்திரக்காசு, பச்சிலை, திப்பலி
மூலம், சீரகம், கருஞ்சீரகம், கடுகு, இந்துப்பு, கடுகு
ரோகிணி இவை வகைக்கு வராகனெடை 5, பெருங்
காயம் வராகனெடை 1, பரங்கிப்பட்டை பலம் - 2
இதுவும் வயித்திர காயம் பண்ணி அந்த கஷாயத்தில் தூவி

கிளறி சர்க்கரை அரைப்படி போட்டுக் கிளறி
தேன்படி ௧ - போட்டுக் கிளறிப் பின்னைக் காயமாது
கொள்ளத் தீரும் வியாதி உள்மூலம், பாண்டு, காமாலை,
உதரபாதகம், இளை, இருமல், மேலிளைப்பு, 18 குட்டம்
அஷ்ட குன்மம், மகோத்திரம், மூத்திரக்கிரிச்சி, உதிரக்கணை,
மேல்வீக்கம், வாய்வு, பொருமல், அரையாப்பு இவை
யெல்லாந் தீரும்.

சர்வ சுரத்துக்கு அரக்கெண்ணெய்

அமுக்கிரா, சித்தாமுட்டிவேர்,
கொம்பரக்கு, ஒரொன்று பலம் 16 இடித்து பதக்கு நீர்விட்டு
நாலொன்றாகக் காய்ச்சி வடித்து நாழி நல்லெண்ணெய்
323. பசுவின் தயிர் தண்ணீர் பதக்கு, கூட்டிக் கலந்து
அமுக்கிராவேர், சித்தாமுட்டிவேர், சித்திரவேர், சிற்றரத்தை
அரேணுகம், கோட்டம், மூத்தக்காசு, சந்தனம், மரமஞ்சள்,
கடுகுரோகணி, சதகுப்பை, குந்திரிகைப்பழம், பெருங்
குரும்பை, திப்பலிமூலம், தேவதாரு, மஞ்சிட்டி, அதிமதுரம்,
வாலம்பாசிவேர், நன்னாரிவேர் இவையெல்லாம்
நாழி எண்ணெய்க்கு கழஞ்சு விதமாக அரைத்துக்
கரைத்துப் பதத்தில் வடித்து சர்வாங்கமுமடைச் சர்வ
சுரம், மாறல் சுரம், இருமல், வயறு பொருமல், காச
சுவாசம், க்ஷயரோகம் இவையெல்லாந் தீரும். பாவுன்னம்
சுகத்தாது வர்த்திக்கும் இது சிவனார் தெரிவிக்கின்றார்

தலைவலி, நேத்திரவாய்வுக்கு பேய்ப்பீர்க்கு தயலம்

பேய்ப்பீர்க்கிலைச் சாறுபடி!
வெள்ளாட்டுப்பால்படி!, கரிசலாங்கண்ணிச்சாறுபடி!
நெல்லிக்காய்ச் சாறு படி!, எலுமிச்சம்பழச்சாறுபடி!
கத்தாழைச் சாறு படி! பேய்ப்பீர்க்கன் விதைதூள்
படி!, வெள்ளாட்டு நெய் படி! பசுவின் நெய்படி!
விளக்கெண்ணெய் படி! நல்லெண்ணெய்படி! ஏலம்,
லவங்கம், லவங்கபட்டை, கிராமலை, கோட்டம்,
அதிமதுரம், விலாமிச்சவேர், சந்தனம் அகில்சந்தனம்
மஞ்சிட்டி, பன்னா(துன்னீ) வாட்டாள் கிழங்கு, மஞ்சள்,
மரமஞ்சள், நன்னாரிவேர், சாதிக்காய், கடுகுரோகணி,
முத்தக்காசு, சடாமாஞ்சி, வெட்டிவேர், தக்கோலம்
தகரம், கிரும்பைமுகிள், சிறுதேக்கு, நெய்தல் அல்லிக்கிழங்கு
324. பேய்க்குமட்டிவேர் வகையொன்றுக்கு ஒரு வராகனிடை
பொடி பண்ணிக் காய்ச்சித் தயலமான வரை
கல்தூளைப் பொடி சட்டியில் போட்டுத் தயலம் வடித்து
தலைமுழுக நேத்திரவாய்வு, பாரிசவாய்வு தலைவலி
சகல ரோகமுந் தீரும். சீகைக்காய் தேய்த்து முழுகவும்.

உட்டுவாயோதிக்கு மடி வாதம் மடி வாய்புருதிக்கும் கடைகறைக்கு மருந்து

நெஞ்சிலே திருநீற்றுப் பைப்போலே
கட்டிக்கொண்டு தொங்கும். எந்நேரமுங் காச்சலடிக்கும்,
இருமலடிக்கும் வாயாலே சீ வரும் மடி வாய்புருதிக்கு
நோவு வந்தவுடனே சீ வரும் இது பாரிசத்திலே
வாழைக்காய் போலே கிடக்கும் மடிவாதத்துக்கு
சூதகமான நாளையிலே உதிரங்கட்டி கட்டியாகத்
தள்ளும் கடைகறைக்கு வாசாபுரத்திலே கொடிக்கடலைலே
இருந்து மேல் நோக்கி வீங்கி பார்க்கிறபோதும் கிளாக்கரு
அவரைக்காய் போலே வீங்கியிருக்கும். இந்த நாலு
வகைக்கு மருந்து — சாரணைவேர், வணங்காவாளை
வேர்: மலைகள்ளிவேர் இந்த மூன்று வகையும் கொண்டு
வந்து சாரணை நறுக்கி அருப்பார்த்து எடுத்துப் போட்டு
பசுவின் பால்வாட்டு சின்ன வாளாங்காய் மாதிரி
நைசாக அரைத்து பால்வாட்டுக்கு கருவாணைமாறு
காவாளைவேர் மலைக்கள்ளிவேர் தட்டி உள்
நரம்பு வாங்கி மேல்பட்டை இவ்வொன்று சுள்ளிக்
காயளவு மூன்று வகைக்கு மக்கொள்படி பசுவின்
பாலிலே கலந்து குடிக்கவும். உடைஞ்சு வயத்திலே
நோவு போலவும் சீதம் போலவும் எடுக்கும். அதின்
325. மாறு தியக்கமானால் மோருஞ் சோறு கொடுக்கவும்
இரண்டுநாள் சென்று மாறு மாறு, சுக்கு, வெள்வெங்காயம்,

சீரகம், ஓமம், திப்பலி, இந்த ஆறு வகையும் வகைக்கு பலம்-1 இளவறுப்பாக வறுத்துப் பொடி செய்து ஒன்றாகக் கட்டி ஒரு படி பசுவின் நெய்யும் பலம்-1 சுத்தப் பனைவெல்லமும் காய்ச்சிப் பொடி போட்டுக்கிளறி வேளைப் பருத்திச்சாறு மூன்றுதரம் ஒவ்வொரு துள்ள எட்டு வைத்துக் கொண்டு மாங்காயளவு காலையில் சாப்பிடவும். பத்தியம் புளி ஆடவும் - உடுவாய்பருதி, மடி வாய்பருதி, மடி வாதம், கடைகணை, இந்த [illegible]ம் வகை நோயும் தீரும்.

மதனகாமேசுர குளிகை

சுக்கு, திப்பலி, மிளகு, கொத்தமல்லி, கைவாய்விளங்கம், ஆனைத்திப்பலி, ஏலம், நற்சீரகம், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், சன்ன லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ இவை வகை ஒன்றுக்கு வராகனெடை 2 சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம், லவங்கபத்திரி, கசகசா, குரோசாணி ஓமம், கிராம்பு, மராட்டிய மொக்கை அபினி மருந்து இது வகைக்கு வராகனெடை 1 ஓமப்பலம் 1, பறங்கிப் பட்டை பலம் 1, கண்டுபரங்கி பலம்-2, சூடசர்க்கரை

காமசர்க்கரை, மதனசர்க்கரைக்கிழங்கு, கோரைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு கீந்திக்கிழங்கு நன்னாரிவேர், ஆலம்விழுது, நற்பாலைவேர், உருசும்பாவேர், பெருங்கிழங்கு இவை வகைக்கு வராகனெடை 2, முருங்கைவிதை, முசட்டைவேர், சமுத்திர சோதிவிரை நாய்வேளைவிரை, நீர்முள்ளிவிரை நெருஞ்சிவிரை மருதமந்தாரவிரை
326 கஞ்சாங்கோரைவிரை, நாயுருவிவிரை, கஞ்சாவிரை, வாலவிரை, பூனைக்காலிவிரை, தாதாரவிரை இவை வகைக்கு வராகனெடை 1 இவையெல்லாம் சேர்த்து சட்டியில் போட்டு இடித்து சூரணம் பண்ணி தேங்காயில் அடைத்து வாய்மூடி செம்மண் சீலை சுத்தி புடமிட்டு இந்த சூரணத்துக்கு சக்கு ஒரு பங்கு கஞ்சா-(4)க்கு ஒரு பங்கு சர்க்கரை போட்டு இளநீர் விட்டரைத்து சுண்டைக்காய் அளவு குளிகை செய்து சாப்பிடலாம். சகல வியாதியுந் தீரும். வீரியமுண்டாம்.

கிரந்தி புண்ணுக்கு களிம்பு

வெள்ளைக்குங்கிலியம், கெந்தகம் செம்பருத்திச் சாற்றில் சுத்தித்துக் கொண்டு கடுகோட்டு எரும்பு சுட்டுக் கொண்டு வெங்களப்பொடி இதுவெல்லாம் கோவையிலை, பெரும்பாயிலை கையாந்தகரை இலைச் சாற்றில் அரைத்து வெண்ணெயில்

வைத்துக் கொண்டு வெள்வேலம் பட்டை கடுக்காய் காய்ப்பாக்கு தட்டிப்போட்டு வேக வைத்துப் புண்ணை கழுவ காரம் போட ஆறும்.

புண்ணுக்கு மருந்து

சுடுகாட்டெலும்பு வெங்காரப்பொடி உப்புக்காயம் பண்ணிக் கொண்டு துத்தம் பனையாடை சுட்டுக் கலந்தால் போட்டு நல்லெண்ணெயில் குழிசெய்ப அரைத்து பண்பு கையாந்தகரைச் சாற்றிலரைத்து பண்பு
327. கோவைத்தண்டுலே தட்டி உரசி அந்த தண்ணீர் விட்டு அரைத்து வெண்ணெய் போட்டு அரைத்து வைத்துக் கொண்டு புண்ணுக்குப் போடவும். மருதாணித்தழை அரைத்து பூச புண் ஆறும்.

எண்ணெய்

அமுக்கராங்கிழங்கு மாவிலிங் கிழங்கு, சங்கம்வேர், சித்திரப்பட்டை, ஊஞ்சல்பட்டை, கருக்கம்பட்டை, ஆவாரம்பட்டை, நிலவாரைவேர், வேர், அண்டைவேர், செங்கத்தாரிவேர், செம்மரப்பட்டை, பட்டைக்கிழுக்குவைப் பட்டை, வெள்ளைக் குங்கிலியம், கடுக்காய், மஞ்சள், துத்தம், சூடம், கெந்தகம், மெழுகு, வெள்ளுள்ளி, திப்பிலிமூலம், இலவம், காசுக்கட்டி, இவைவகை ஒன்றுக்கு வராகனெடை 1 அரைப்பொடி

கோஷ்ரம்பட்டம் வீரகண்டை 5 எலுமிச்சம்பழச்சாறு உழக்கு சித்தாமணக்கெண்ணெயிலாக்குதல் முன்றுக்குப் போட அதுவும். கிரந்திப்பண்டம் ஓடவும்.

கண்ட மாலை குண்டமாலை
கன்னச் சிலந்தி உப்புசி
மண்டு ராசப்பிளவையுடன்
மேன்ரை யாப்புகசி வாயை
கண்டதூ மாலைபடு மூலன்
காழல் கிரந்தியலை தொக்கு
பண்டுதூ மாசுமுள் மருந்து
பல்கோ ரந்தாள்றா றிடுமே

1

கொடியப் பகந்தரம் பக்க பகந்தரம்
கோதமாறைப் முற்றுட னாசனம்
மொடிப்பு நாடியதண்டு மாலையும்
சேர்கழுத்தில் வீங்கண்ட மாலை
328. அடுக்கடுத்த பிளவை யாவைமிகு
விளைதாமரை யானது மாலையும்
கடுக்கை சூடியசீசனிரு கழன்று
காறமென்று கருதுங் காறுமே

2

(பாதி குறைந்துள்ளது)

329. ஆனைதான் உரசுக மட்டும்
ஆயிரம் யானையா னாலும்
மானைகள் மடமை நெய்யும்
மருந்தி யானை நாயும்
பேனையே இத்தாட்டுச் சுடவே
மடைகையில் வைத்துக் கட்ட
ஆனைதான் உரசும் போது
அரசன் என்னையே கூட்டே

6

கருகிறகனி வேம்பட பட்டை
கிராம்பு செங்கருநீர் கோட்டும்
கொடுமோ மனதினில் வாருங்
கொத்தமல்லி கையில் வாங்கும்
அதனை மிறியமாகு கருடன
அசும தேதுடன் துள்ளியும்
உடுனக கடைசுரக்காய் வளையும்
வேருவேர் தாயமாக வினவுதே

7

என்னையே காய வைத்து
கிஸ்டன் பொங்கும் போது
உன்னுமக கலந்து மெல்ல
உபாயமாய் நக்கி கொண்டு
கன்னார மொழியு மந்த
கடைச் சுரக்காய் வைத்தும்
புன்னலா மருந்து வேரும்
வெடுகொடி யடுள தானே 8

பொங்கி வரும் வெள்ளைதனைத்
மொடுமை போட்டு போல
வெங்கலத் தன்னில் பொங்கி
வருகின்ற வெள்ளை யெல்லாம்
பெண்களுற்ற் காத்து வாங்கட்டு
உ...திர் வைத்து புண்கழுன்னை

சினைபோடப் புண்ணாறுந் தானே

7

சிறுகுறிஞ்சா, மாதுளங்கொழுந்து, ஆவரைக்
கொழுந் கொடிவேலிவேர் இந்த நாலும் சம அளவு
இடித்து சூரணம் செய்து கடப்பாலைச் சாற்றில் பாவனை
330. உலர்த்தி சூரணம் மெருகேடி அளவு வெந்நீரில்
கொள்ளவும். நந்த வாரதப்பால், மாகு தக்காளி,
நல்லெண்ணெய் மூன்றும் அளவு - 20 நாள் வெய்யில் வப்பு
பாராவடம்.

இரத்த மூலங்களில் கோட்டை
இப்பாங் சுங்கு வெள்ளிடு
உரமே செய்யு மஞ்சளுடன்
நீக்கவோ றொன்றுதனி தனியே
தாகவெ நாறு கசக்கு
சகளை செய்துபக்க காட்ட
உறவாய் உடைவுள் வீடும்
மறைத்த வாதம் காலபடை

சித்திரமூலம்வேர் பலம் 1, செவ்
கிந்தாளவேர் பலம் 1, சங்கம்வேர்பலம் 1, சோமநாதப்
பெருங்காயம் வராகனெடை 2, கோரோசனை
வராகனெடை 5, மிளகு வராகனெடை 5, திப்பிலி
வராகனெடை 3, சீரகம் வராகனெடை 5, சாதிக்காய்
வராகனெடை 2, லவங்கம் வராகனெடை 2 இவையெல்லா
மரைத்து ஒரு படி நல்லெண்ணெய் ஒரு அச்சுநல்லவெல்லம்
இதுவெல்லாம் எண்ணெயலாக்கி தினம் அந்தி விடிந்து ஒரு
கரண்டி கொள்ளவும். பவுத்திரம், கண்டமாலை அரையாப்பு
இவையெல்லாம் தீரும்.

வாதமு மேல தாகி மந்தமாய் பசியற் றாமல்
போதவே கிறுகிர் நாளும் பொருந்து நீர்கடுப்பு சுரமே
சீதமாய் ரோக மெல்லாம் சொன்னோ யதுதனையுந் தீமாய்
331. போதவே நின்றாய் போலே ஆமயந் தன்று மென்றான் 1
முன்னது மூச்சை தானும் மூனை மூக்கால் தானிருக்கில்
அன்னமே மூள நெளிந்து அதுடன் நினவுடன் வந்துடும்
பன்னவே உடம்பு வத்தி பரச்சையாய் நேடாசை விபயும்
சொன்னது பெண்கலே அந்த தொடுத்திடும் உயர்வே யமே
வாதம் காலம் சேத்துமத்தில் கூட நடக்கும். பித்தம் 2
வருத்திடுக்கும் இதன்றுமைந்து —

தூதுவளைவேர், வேப்பங்கவேர், ஆனை
சுண்டைவேர், செஞ்சுண்டைவேர் சத்திசாரணை,
நந்தசாரணைவேர் இந்த வகைப்பட்டை பலம் 1,
மிளகு, திப்பிலி, ஓமம் வகைக்கு பலம் 5, சுக்கு, சீரகம்,
கருஞ்சீரகம், காட்டுசீரகம் அரைந்து வகைக்குபலம்
சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம், பெருங்காயம்,
வெங்காரம், அபினி மருந்து இந்துப்பு, பொட்டிலுப்பு
வகைக்குபலம் கடுக்காய்த்தோல்பலம் 1, சர்க்கரைபலம் 4,
சித்தாமணக்கெண்ணெய்படி 5, நல்லெண்ணெய்படி 5,
பசுவின்நெய்படி 5, தேன்படி 5, இவை சூரணம்
போட்டு கிளறி மெழுகு பதத்திலிறக்கி கடுக்காய்
அளவு கொள்ளவும். அனாமாந்தமும் காக்கவும்.

மூர்ச்சைவாய்வுக்கு நசியம்

சாதிக்காய், சாதிபத்திரி, குந்திரிகமும்
332. வகைக்கு வராகனெடை வ ஒருபடி பசுவின்நெய்யில்
நசியம் இடவும்.

சூசிக வாய்வுக்கெண்ணெய்

மறந்திடு நாதம் சூதம் பிள்ளை பெற்றிடும் போது
நிறைந்த வயற்றில் கட்டுமே வாய்வு தானும்
உறைந்திடு உதரந் தானும் நோய்கயெ மிக்கத் தானும்
சுரந்திடு சூத வாய்வு யென்றுதான் சொல்லு வாரே

நினைவு அசதி மாறாமயம் தாகம் சுரம் கண் சுத்துவதும்
ஒரு புறஞ் சுரமும் ஒரு புறமும் குளிரும் பொருமியரு
கசியும் காந்தல் பறியும் சூதிக வாய்வு வகை - மருந்து

சிங்கம்வேர், வால்மவேர், சாரணைவேர்,
சவ்வியம், தேவதாரு, வாய்விளங்கம், தூதுவளைவேர்,
சீந்திவேர், சித்தரத்தை, சிறுதேக்கு, முசுதிலைவேர்,
கண்டங்கத்திரிவேர், சிறாயவேர், சூலவேர், நொச்சி
வேர், முங்கம்வேர், மிளக்கொழுஞ்சிவேர், திரிகடுகு,
மஞ்சள், வட்டத்திருப்பிவேர், திப்பலிமூலம் சமனெடுத்து
கசாயம் கொடுக்க சூதிக வாய்வு தீரும்.

ஒருபடி நல்லெண்ணெய்க்கு ஒரு
எலுமிச்சங்காய் பருபாதி சித்திரமூலம்வேர் அரைத்து
அந்த அளவு சாரணைவேர் அரைத்து இதும் ஒரு
வீராகனிடை உடைத்தும் சாற்றில் பிழிந்து இவையெல்லாம்
எண்ணெயில் போட்டு எரிந்து பதமானால் ஒரு
கரண்டி கடுகு எண்ணெய் கொள்ளத் தீரும் வாயுத்
திரந்தி, அரையாப்பு பவுத்திரம், குன்மம், கிரந்தி
கன்னம் ஆறாத புண்ணுக்கு இவையெல்லாம் தீரும்
3நாள் கொள்ளவும் உப்பு பத்தியக் கட்டவும். புளி
ஆகாது

333. பச்சை வெட்டு குங்கிலியம் பலம் 3, கஸ்தூரி வராகனெடை 5, கற்பூர சிலாசித்து வராகனெடை 5, ஏலம் வராகனெடை 5, நற்சீரகம் வராகனெடை 5, வெங்காரம் வராகனெடை 2, நல்லெண்ணெய் படி 1, பசுவின் பால் படி 1, எலுமிச்சம் பழச்சாறு படி 1, கருநொச்சி யிலைச்சாறு வாட்டு குங்கிலியம் வெண்மை பண்ணி வாங்கவும்.

விளக்கெண்ணெய் ஒருபடி, இளநீர் ஒருபடி, வல்லாரைச்சாறு படி 3, பொன்னாங்காணிச் சாறு ஒருபடி வட்டபேய்மருட்டிச்சாறு ஒருபடி முசுமுசுக்கைபொடி வல்லபொடி, கற்பூரசிலாசத்து வராகனெடை 2, சாதிக்காய் வராகனெடை 1, லவங்கம் வராகனெடை 1, ஏலம் வராகனெடை 1, நற்சீரகம் வராகனெடை 1 எண்ணெயிற் போட்டு காய்ச்சி கற்கமும் எண்ணெயும் ஒரு கரண்டி வாங்கவும். சிரந்தி உடனே தீரும்.

கடுக்காய்க்கொட்டைப்பருப்பு பேய்ப்பீர்க்கன் விதை, கொம்மட்டிவேர், அகத்திப்பூ குன்றிப்பருப்பு சேரப்பருப்பு அயவெண்ணெய் ஆனைநெருஞ்சில், கத்தாழை, அந்திதாமரை வேர்

மீர்க்கிளை இந்த சாறும் நவநீதம் கொதியாட்டுத்
தீவனது போட சுலம் பலம் தரும்.

சிரசாரோயம் உள்கொண்டு சிறந்த ஞானம் பாடலுமாம். ஒரு மேனை மாந்துயிர் போல தளிர் நெருந்த அடிபண்டாம் திரு ரோகந் பக்தி செல்வமாகு திரிவிதிய நாளங் கரைந்த கற்பத்தை நல்லதுள்ள கொள்வோர்க்கே. இதுக்கு கடைச்சரக்கு: சுக்கு, மாசி திப்பிலி, இந்துப்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், நீர்பசாளகொழுந்து பொருளைஏலக்காய், ஜாதிக்காய், வசம்பு, ஏலம், லவங்கம் இது இவைகளாக பொடித்து சூரணம் பண்ணி அந்த கற்பத்துக்கு சரிபங்கு கூட்டி ரெண்டுக்கு சரிசமன் சர்க்கரை கலந்து வெள்ளியில் கொள்ளவும்.

மூலத்துக்கு

ஏலம் பலம் 1, சீரகம் பலம் 1
நேந்திரங்காய் 2, சிறுவெங்காயம் படி, சர்க்கரை பலம் 4
உமத்தியுள் சுதைப்பலம் 4 பசுவின் நெய் படிக்கு
இதெல்லாம் பொருத்துப் பொடி பண்ணி நெய்யில்
போட்டு கொள்ள மூலம் முளைக் கரையும் குணமாம்

வாய்வு பொருமலுக்கு

சுருங்கை கிழங்கு சாறெடுத்து மாவை பொரித்துப்பு
நெருங்கும் வெருங்காய பசும் போலம் நெருப்பு தோயும் அவுர்.
சுருக்கக் காய்ச்சியிட் டொன்றாக்கி உதிக் குக்க பள்ளிரவு
மருங்கு சுதர்ந்த நோக்கடு தலைற்ற பலயும் வாராதே

மாரடைப்புக்கு கசாயம்.

ஓமம், குரோசாணி ஓமம், லவங்கப்
பட்டை, சீரகம், இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பலிமூலம்,
வாய்விளங்கம், வெட்பாலைவேர், கண்டங்கத்திரிவேர்,
335. ஆக 11 சரக்கையும் கசாயம் பண்ணிக் கொடுக்கவும்.
மாரடைப்பு வாய்வுந் தீரும். சந்தனந் தண்ணீர்
கொடுக்கவும். நெல்லிக்காய் சாறுந் தயிரும் கொடுக்கவும்.
அருகம்வேர் இடித்துச் சாறு பிழிந்து சர்க்கரைப்
போட்டு கொடுக்கவும். முருங்கைவேர்ப் பட்டையும் வறுத்து
கசாயம் பண்ணிக் கொடுக்கவும். இவைகளைக்கொண்டு
தயிரும் அரைத்துத் தொண்டை மார்பு தொப்புளில் பூசவும்.

உரோசக பித்தாள் மருந்து.

பருத்திக் கொட்டை உடைத்து இடித்து
பருப்பு எடுத்து சர்க்கரை கலந்துப் பாக்கவும். பருத்திக்
கொட்டை உடைத்து இடித்துப் பொட்டணங் கட்டி
முகரணம் இது கவுரா உரோசன பித்த மாராந்தி வாந்தி
அரோசிகம் குணமாம்.

பாசாணம் முறிவு

திப்பசாங் கடுக்காய், கனி
பாக்கு, கத்தாரிஞ் சருகு சிவதைப் பாகல்இலை இவை
உரோசனம் பண்ணி தேங்காய்ப் பாலில் பருப்புகளாகி
போட்டு சமைத்து மூன்றுநாள் சாப்பிட சகல
பாசாணம் முறியும். கசப்பு, புளி ஆடவும்.

பிரதராட்சு மாத்திரை

மிளகு பலம் 4, வெள்ளெருக்கு வேர்ப்
பட்டை பலம் 3, மிளகரணை வேர் பட்டை பலம் 1,
அக்கிரா பலம் 1, சிற்றாமணக்கு வேர் பட்டை பலம் 3,
திப்பிலி பலம் 4, தேசாவரம் பலம் ½ இது அரைப்புத்
துளசிச் சாற்றில் ஒரு சாமம் காசினிக் கண்ணிச்
336. சாற்றில் ஒரு சாமம் காட்டு முருங்கை வேர்ப்
பட்டைச் சாற்றிலொரு சாமம் அரைத்துப் பெரிய
சுண்டைக்காயளவு குளிகை பண்ணி உலர்த்தி
அநுபானம் தேனிலொரு மாத்திரை கொள்ள சேத்தும
ஆறும். முந்திரிப்பழமும் சர்க்கரையும் ஒரு மாத்திரை
கொள்ள சர்வ பயித்தியம் தீரும். இஞ்சி சாற்றில்
ஒரு குளிகை கொள்ள சன்னி 13 தீரும். தும்பராட்டம்
அரைத்து ரசம் பிழிந்து கொண்டு காசினிடை தேனும்
ஒரு குளிகை கொள்ள சேத்தும இருமல் உப்பசம்
காசந் தீரும். நொச்சிச் சாற்றிலொரு குளிகை கொள்ள
என்பது வாதந் தீரும். வாய்வு 24 வெள்ளைப்பூண்டுச் சாற்றால்
தீரும்.

கிராணிக்கு

மாதளங்காயைக் குடைந்து விதை வாங்கி சாதிக்காய், பத்திரி, லவங்கம், சீரகம், மிளகு, சுக்கு, அதிவிடையம், அபின் சாதிப்பூ காயிலடைத்து சீலைமண் செய்து ஒரு புடமிட்டு மலை தாங்கி சுக்கு கஷாயத்தில் அரைத்து தயார் தேனில் குளிகை கொடுக்கவும். சகல கிராணியுந் தீரும்.

சுக்குடன் உசம்பு வேரம்
சூதமுள்ள சாதிக்காய் பத்திரி
மிக்கதோ ஏலமம்கிராம்பு
குருமான்கொட்டை புளியங்கொட்டையோல்
தக்க நீர்முள்ளி உளரசங்கா
அமணிசா யதிரனை கூட்டி
மிக்கதா . . . .
337 வெரைந்த தட்டைசுட்டுக் கூட்டே

சுட்டுமை தாம்பூழக்க சாற்றரைந்த
சீதபளாஞ் காய்பரமான குளிகை
கட்டி நயர்ந்தான் குடுக்க
காந்த கிராணி யகிசாரம்
அகட்ட கடுப்புடன் எடுப்பு
ஆன சீதம்பல் உளைவு
மட்டுபண்ணு கழிச்சு மெல்லா
மாமேலோன் சொன்னமருந் தாமே

கிராணிக்கு

சாதிலிங்கம் உரோகணிடை, எருக்கன்

சாத்தில் சுக்கு மண்ணி வெங்காரம் ஆக உரோகணை
பொரித்துக் கொண்டு திரிகடுகு ஓமம், வசம்பு நல்ல
338. ? சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், சாதிப்பத்திரி
லவங்கம், அதிமதுரம், காசுக்கட்டி, நீர்முள்ளி

பிரைத, குடம்பாளை, மாதளம்பாரை, நல்லக்கொட்டை,
மாங்கொட்டை, புளியங்கொட்டைத்தோல்
எல்லாம் பிசின், இலவம்பிசின், வாலாம்பிசின் சரி
கூட்டி மருந்துரைப்புக் கூட்டி மனைந்தாங்கி
கஷாயத்தில் ஒருநாள் அரைத்து குடம்பாளைப்பட்டை
கஷாயத்தில் ஒருநாள் அரைத்து சூத்தக்காசு கஷாயத்தில்
ஒருநாள் அரைத்து மாதுளங்காய் சாற்றில் ஒருநாள்
அரைத்து வாழைக் கிழங்கு சாற்றில் ஒருநாள்
அரைத்து சுண்டைக்காய் அளவு உருண்டைபண்ணி
மோரில் கொடுக்கவும். சுரத்தில் கழிச்சல் தீரும்.
மிளகு, இஞ்சி சாற்றில் . . . . . கிராணி தீரும்.
பெருமருத்துப் பட்டைச் சாறும் தயிரும் கூட்டிக்
குடிக்கவும் ரத்தக்கிராணி தீரும்.

சுக்கு, நெல்லிப்பட்டை கஷாயத்தில்
கொடுக்கவும். சீதக்கிராணி, பித்தக்கிராணி தீரும்.

பெருமருத்துப்பட்டை சாறும் தயிரும்
கூட்டி குடிக்க ரத்தக்கிராணி தீரும்.

வெள்ளுள்ளி லேகியம்

வெள்ளைவெங்காயம் பலம் 16, திரிகடுகு,
பெருங்காயம், பஞ்சலவணம், சத்திச்சாரம், எவச்சாரம்
338. ? விளக்கவீரகண்ட உரு கோட்டம், கொத்தமல்லி

சீதகுப்பை, தேசாவரம், சித்திரமூலம், ஓமம், கடுகு, சாதிக்காய் வகைக்கு வராகனிடை 5 சூரணம் பண்ணி வெங்காயம் உரித்து முறை வாங்கி நல்லெண்ணெயில் சிவக்க வறுத்து அரைத்து நெய் ஒரு படி நல்லெண்ணெய் ஒரு படி வெல்லப்பாகு காய்ச்சி சூரணம் போட்டுக் கிளறி தான்றிக்காய் அளவு கொள்ள தீரும் வாயுதி சூதக வாய்வு, கிராணி, யோனி சூலை, உதிர வாயுதி, மேகம், மூத்திரகிரிச்சையும் தீரும்.

<u>வெள்ளைக்காரத்துக்கு</u>

அதிமதுரம், இஞ்சி, ஏலம், சீனிசக்கரை இவையெல்லாம் சூரணம் பண்ணி பசுவின்பால் வெருகடி
337. அளவு கொள்ளவும். மந்தம், அரோசிகம், வெள்ளைக்காரம் எல்லாந்தீரும்.

<u>ரத்தப்பிரமேயத்துக்கு</u>

சீதம்பூ இலையை தகைத்து சாறு பிழிந்து ஒரு படி, பசுவின்பால் ஒரு படி, நெய் ஒரு படி, ஏலம் பலம் 5, சர்க்கரை பலம் 1, லேகியம் பண்ணி சாப்பிட ரத்தப்பிரமேயந்தீரும்.

<u>தாம்பிராதி குளிகை</u>

செம்புப்பொடி பணவிடை 16 சாம்பெட்டு பணவிடை, கந்தகம் 2 பணவிடை, துரிசு 2 பணவிடை, லிங்கம் பணவிடை 4, ரசம்

பணவிடை 1, திப்பிலி பணவிடை 5, நாமகனை கசாயத்திலும் நந்தியாவட்ட சாற்றிலுமரைத்து பயறளவு குளிகை பண்ணி நிழலிலுலர்த்தி அனுபானத்திலிடக் கண்ணோவு சூ மாறும்.

மாதவனுக்கெண்ணெய்

மாதவன் கிழங்கு, பனங்கோரைக் கிழங்கு, அப்பைக் கோரைக்கிழங்கு, ஆகாசக் கருடன் கிழங்கு, பசுபாகல் கிழங்கு, செங்குத்தாரி வேர், செம்பரப்பட்டை, மாசு, வெள்ளெங்காயம் நிலவாகைவேர், உசிலம், ஆலம், சதுப்பை, நெய் பாக்கெண்ணெயில் வார்த்து விக்கம் புண்ணுக்குப் போட மாதவன் தீரும்.

மெருகெண்ணெய்

மெருகன் கிழங்கு மேல் தோல் சீவி நறுக்கினது பலம் 32, பதக்குக் காடியும்
3அக. பதக்கு தண்ணீர் விட்டு எட்டிலொன்றாக்கி காய்ச்சி இறுத்துக் கொண்டு சுக்கு, மாசு, திப்பிலி, கிச்சிலிக்காசு தேசாவரம், சாதிக்காய் கோஷ்டம் பட இன்றுக்கு

உரோகணை 3 கட்டி இடித்து பிசுகாசுமாங்காய் முதல்,
நல்லெண்ணெய்ப்படி 2 காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து
நீக்கி நசியம் போட்டு உடம்பெங்கும் தடவிக்க வாத
சுரம் சந்நிசேத்தும சுரம் கெப்பணசுரம், ஊது சுரம்
இவையெல்லாந் தீரும்.

ஆகாசம் வலிப்பு சனுவாங்கிக்குத் தயலம்

பேய்க்குமட்டி, பேய்த்துமட்டி
பேய்த்தும்பை, பேய்ப்பீர்க்கு, பேய்அத்தி, பேய்முன்னை,
பேய்க்கரும்பு, பேய்ப்புடல், பேய்ச்சுரை, நெட்டிப்பேய்
மரட்டி, வட்டப்பேய்மரட்டி இவையெல்லாம் சாறு
உழக்கு ஒருபடி। அந்தெண்ணெய்படி கூட்டி
எரித்து வடித்து மேழுக்குப் பூச ஆகாசம் வலிப்பு சனு
வாங்கியுந் தீரும்.

நெஞ்சளைகோடாகுளிகை

பச்சைநாவியும், இரசமும்
பாளைப்பொடி தண்ணீரிலே போட்டு வேக சுத்தி
கோழிக்குருத்திலே ஒரு சாமம் ஊறப்போட்டு எடுத்து
கொள்ளவும்.

மரமஞ்சள் பொடி, செங்கல் பொடி
-யால் மத்திக்க சுத்தி கெந்தகம் பாலில் புடமிடவும்.

அரிதாரம், அன்னபேதி கரைந்து அதிலே
நோவந்திரமாகக் கட்டி பத்து நாழிகை வேகவிட்டு
எடுத்துக் கொள்ளவும்.

வெங்காரம் கோமூத்திரத்தில் ஊறப்
போட்டு கொள்ளவும்.

நேர்வாளம் சாணியில் வேகவைத்து
இரு உடைத்து நஞ்சு விலக்கி எடுத்து சுத்தமான
மடலாதுப்பு மட்டும் பாண்டு எலுமிச்சம் பழச் சாற்றில்
ஊறவும் சுத்தி பண்ணப்படும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, நாபியில்
இவை சமபாகம் இதுக்கு சரி நேர்வாளம் கூட்டி
கன்னி சாறு விட்டு தினம் ஒரு சாமம் அரைத்துக்
குன்றிமணி அளவு மாத்திரை பண்ணிக் கொடுக்க சகல
வியாதியுஞ் சரியாகத் தீரும்.

தாளிசசூரணம்.

௮௨. சுக்கு மிளகு திப்பிலி துய்ய லவங்கம் பட்டையுடன்
தக்க லவங்க இலைகளிது தாளிசம் சமன்றான் பேலம்
இக்க சூரணம் சர்க்கரை உத்த வெல்லத்தான் கொள்ள
டக்க விருமல்வறு மீசா ஊதுமா வாந்தி போனவபோம்.

ஊதுவாதத்து வீக்கத்துக்கு

சிறுகுறிஞ்சா சமூலம், கண்டங் கத்தரி சமூலம், தூதுவளை சமூலம், சாறணை சம் மூலம் சித்திரமூலம் சமூலம், நீலி சமூலம், இசப்பாவேர், புன்னாக்குப்பூ, வெள்ளறுகு, அமுக்கிராங்கிழங்கு நீர்முள்ளி சமூலம், சங்கம்வேர், சங்கங்குப்பிவேர், பாவட்டம்வேர், புங்குறாப்பட்டை, கோவைத் தண்டு, சோரைத்தண்டு, நன்னாரிவேர், கழிச்சவேர்,

342. சுக்கு இவைகளை தட்டிப் போட்டு ஒரு வள்ளத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி வடித்து திப்பிலி வெதுப்ப பொடி போட்டுக் குடிக்கவும். ஊதுவாதம், வீக்கம், பக்கவீக்கம், அண்ட வீக்கம், காமாலை, சோகை இவைகள்தீரும். இதுக்கு கடுக்காய் உட்டவும்.

நாயுருவிச் சாறு ஒரு கரண்டி வெங்காரம் பொரித்துப் போட்டு குடிக்க காமாலை, ஊது வாதம் மாண்டு தீரும். கல்லடைப்பு குன்மங்களும் நீர்க்கட்டுந் தீரும்.

பெருங்குறிஞ்சா இலையை வெட்டித் தண்ணீர் இறுத்துப் போட்டு இந்த பாலையை தின்ன எந்த காமாலையும் போம்.

கிருச்சி, குருவளா, நீர்முள்ளி, நெருஞ்சி ஊதுகுறிஞ்சி, சாரத்தண்டு, வெள்ளறுகு, வசம்பு

பிளைக்கு. சுழிஞ்சு போட்டு அடைக்கு குடிநீர்
கொடுக்கவும் ஊதுவாதம், வீக்கம், காமாலை வரும்

<u>காமாலை, சோகை, பாண்டு, ஊதுவாதத்துக்கு</u>

<u>எண்ணெய்.</u>

சங்கங்குப்பி, முக்கொத்தான்,
கையாந்தகரை பொருமிளாகரணை, நீர்முள்ளி, குப்பை
மேனி, செருப்படி, இலை வெள்ளறுகு, குடம்பாளை, உசும்பா
கோவை கத்திரிக்கு, பாடங்குநாரி, அமுக்கிரான் தவசி
முருங்கை சிறுக்கீரை இது வகைக்கு ஒருபடிச்சாறு
வாக்கொடமுட்டிக்காய் சாறு படி! சாரணைவேர்
முருங்கைப்பட்டை, நிலாவாரைவேர் மூன்று வகுத்துப்
343. பருத்திச் சாறும் வேரும் அதகாசகெருடன் பாலை
கோவைவேர், சிறுகுறிஞ்சாவேர், மனதாங்கிவேர்,
ஈசுபாவேர், பாவட்டம்வேர், வெள்ளாட்டுக்
கோமயம், பசுவான் கோமயம் எருமைச்சாணிப்பா
கறுத்தாட்டைச்சாறு இவையெல்லாம் சேர்க்க
சுக்கு, மிளகு, திப்பிலி, தாழுருவை அரிசி, கார்போகரிசி
உளுவரிசி, வெப்பாலையரிசி, பசுமஞ்சள் சாறு
படி 2, கடுக்காய், தான்றிக்காய், கண்டுசியக்காய்
கருஞ்சீரகம், நஞ்சுவாரை, ஈரவெங்காயம் சாறு ஒரு
படி இடித்து குறைய பண்ணி ஒரு படி வாங்கண்ணெய்

வாட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு
உள்ளுக்கு காசிடை கொடுக்கவும். மேலும் பூச தீரும்.
வாயாதி வாதவாதம், கரப்பான், பாண்டு, காமாலை,
உள்நீர் கோவை, சுரத்துமேல் வீக்கம், குடல்வாதம்,
குன்மாரட்டு, வீக்கம், கசுமாசை, மூலவாய்வு வலக்கட்டு,
நீர்க்கட்டு, நீர்மருமேச்சல், நீர்கட்டு, வயிற்றுவலி,
மடிவாதம் இவையெல்லாந் தீரும்.

உள்மருந்து

சிங்கன்குப்பாச்சாறு படி - ௬

344. வெள்ளாட்டுப்பால் படி - ௫ சாய்ச்சக் குடித்து எருமை
மோருஞ் சோறு குடுத்து மூன்றுநாள் உப்பு, புளி தள்ளவும்.

எண்ணெய்

சிங்கம்வேர்ப்பட்டை
வராகனெடை - ௫, கருஞ்சீரகம் வராகனெடை ௫, நற்சீரகம்
வராகனெடை 5 அரைத்து விளக்கெண்ணெய் ஒரு படியல்
போட்டு பால் ஒரு படியாகக் காய்ச்சி வடித்து அசனம்
பண்ணி ஒரு கரண்டி வாங்க பேதிக்கும்

இதுவும்

பெருண்ணை நறுக்கி மோர்விட்டு
வேக வைத்து உலர்த்திச் சூரணம் பண்ணி கல்லுப்பு கலந்து
வெருகடி அளவு வெந்நீரில் கொள்ளவும். வாதவாதும், வாத
பாண்டு, காமாலை, வாதகரப்பான், வீக்கம், வாய்வு தீரும்.

குக்குலம்கிருதம்

குக்குலம் பலம் 5, பாக்குபோல நறுக்கி வேப்பம்பட்டை, சித்தாமுட்டி, கண்டங்கத்திரி வகைக்கு பலம் இரண்டு கூட்டி இரண்டுபடி தண்ணீர் விட்டு குக்குலம் கூடப்போட்டு வேக சுத்தியாம்.

சித்தாமுட்டி, கண்டங்கத்திரி, சங்கு சீந்தல் வகைக்கு பலம் 5 இடித்து இரண்டு வள்ளத் தண்ணீர்விட்டு ஒரு படியாய் காய்ச்சி வடித்து திரிகடு, இருசீரகம், வாய்விளங்கம், திரிபலை, சதகுப்பை, சிறு தேக்கு, கொத்தமல்லி, சாதிக்காய், சிறாம்பு, காந்தம் வகைக்கு பலம் -வ- கூட்டிக் குறணம் பண்ணிப் போட்டுக் கிளறி பசும் நெய்விட்டுப் பசுவின்பால் படி 2 பாகுபதத்திலிறக்கி நேரம் ஒரு கரண்டி கொள்ள தீரும் வாயோதி வயிற்றுநோவு, உதிர வாயோதி, பவுத்திரம் சிலந்தி சூலம், பாரமுள், ஆசிரந்தி, அரைசந்துக்கிரந்தி தீரும்.

அ.கு: ஒரு உருண்டை கொடுக்க வயிற்றில் நோய்கள் போல வரும்

கொம்மட்டிக்குளிகை

கொம்மட்டிக்காய்த் துவைச்சுச் சாறுபடி 1, செம்புச்சாறுபடி 1, தேட்டக் கிளம்பாய்க் காய்ச்சி கொள்ளக்கட்டம் ஆட்டு கோமயத்தில் சுத்தி பண்ணினது பலம் 2. பொட்டிலுப்பு பலம் -வ பொடி போட்டு கிளறி திரண்ட பான்மை கடுக்காய் அளவு உருண்டை பண்ணி இரண்டு நேரம் ஒரு

கொம்மட்டிக்காய் எண்ணெய்

கொம்மட்டிக்காய்ச்சாறுபடி 1,
ஈரவெங்காயம் சாறுபடி 1, எலுமிச்சம்பழச்சாறு படி 1, உளுக்கெண்ணெய்படி 1 கூட்டி திரள வேகும்போது பொட்டிலுப்பு, உப்புக்கல்பலம், பிளையுப்பு இவைகளிடை 2 பொடி பண்ணிபோட்டு எண்ணெய் வடித்து துட்டிடை குடிக்கவும். அதுவை கசுமாசு காமாலை, பாண்டு தீரும் ஆரோக்கியம்.

ஏலாதி

ஏலம், லவங்கம், பச்சிலை, சிறு
நாகப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், கோட்டம்
சாத்திரவேதி, தாமரைவளையம், கல்நார், கிராம்பு,
கல்மதம், நாககேசரம், செண்பகப்பூ, குந்தக்காசுதிரா
346 கடுகு, நெல்லிவத்தல், சந்தனம், கோரோசனை, உகை
நீறு, நொச்சிவேர், நன்னாரிவேர், விளாம்பழம்,
தண்ணீர்விட்டான், அமுக்கரா, நீர்முள்ளி, தாமரைப்பூ
அசகி மருங்கைப்பட்டை இதுகள் வகைக்கு துட்டிடை
சூரணம் பண்ணி வஸ்திரகாயம் பண்ணி அப்பால்
செந்தூரம் துட்டிடை கூட்டிக்கலந்து நெய்யில்
ஒருகடி கொள்ளத் தீரும் ரோகம் - 21 மேகம்,
பிரமேகம், சுக்கிரக்கட்டி, காபரத சன்னிவெடி
மூத்திரம் நீர்கட்ட யந்திர வாத்தனை கல்லடைப்பு
நீர் கடுப்பு, காமாலை, வாதரோகம், பாண்டு மேக
மெலிந்தேகம். மான ஜடம்.

சேராங்கொட்டைத்தயலம்

சேராங்கொட்டை இரண்டாய் வெட்டினது உள்ளம் ஒரு பானையில் போட்டுப் பாதாளத் தயலம் வாங்கி கெந்தகப் பொடி போட்டு நல்லெண்ணெயில் சாகடட்டி உள்ளுக்கு குடுத்து மேலும் பூச சகல குட்டமுந் தீரும்.

நெல்லிமரத்து உள் பட்டை அரைத்து எலுமிச்சங்காய் அளவு இருவேளை பருவமாற்று குடுக்கவும்.

கருப்பு களைந்த சீதம் தண்ணீர் தாகத்துக்கு

நல்லசீரகம் காசிடைச் சீனியில் பொட்டணம் படைத்து நல்லெண்ணெயில் தோய்த்து விளக்கில் காய்ச்சி பட்டம் பண்ணி வெந்நீரில் அரைத்துக் குடுக்கவும். கருப்பு களைத்தம், சீதம், தண்ணீர் தாகம், நீர்கடுப்பு, வெட்டை, அக்கினிக் கடுப்பு தீரும்.

சகலமானத்துக்கு கொரந்தி எண்ணெய்

சித்திரமூலத்துவேர், சிறுகுறிஞ்சாவேர், எசப்பாவேர், சாரணைவேர், தும்பை வேர், செங்கத்தாரிவேர் - இதுவும் - எலுமிச்சங்காய் அளவு பாதி அரைத்துக் கொண்டு கருநொச்சியால்

சாறு ஒருபடி இதும் ஒருவராகனெடை துளசி,
மருதோன்றி, முருங்கை கய்யாந்தகரை செருப்படை இந்த
இலைச்சாற்றில் இதும் மூன்று உம்ம வராகனெடையெடு
பண்ணி இவையெல்லாம் ஒருபடி நல்லெண்ணெயில்
போட்டு எரித்துப் பதமானால் நேரம் ஒருகரண்டி
347. வெண்ணெயும் கடுகெண் கொள்ளத்தீரும் வயிற்றி
இரைந்தி, சூலை, வாதம், அரையாப்பு கண்டமாலை,
கிரந்தி, தினவு, அகராத புண்ணு சகலமுந்தீரும். இந்த
படி 20 நாள் கொள்ளவும். உப்பு வறுத்துப் போட்டு
கொள்ளவும். புளி, புகை விடவும். பாலுஞ்சோறு
உடவும்

மகாஏலாதிசூரணம்.

ஏலம், அதிமதுரம், இருப்பைப்பூ,
நற்சீரகம், கருஞ்சீரகம், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம்,
சீந்தில்தண்டு, நன்னாரி, சுக்கு, கிராம்பு, ஏலப்பனைக்
கிழங்கு, பூனைக்காலி விரை, சந்தனம், வெட்டிவேர்,
விலாமிச்சம்வேர், நெல்லிவற்றல், லவங்கபத்திரி,
348. நிலம்வேம்பு, கொத்தமல்லி, தாமரைவளையம், தாமரைப்
பூவின்தாது, நாணல்கிழங்கு, உசைகீது, செங்கழுநீர்
கோட்டம், கஸ்தூரி, இலவங்கப்பூ, கற்பூரம், சடா
மாஞ்சி, தக்கோலம், சாதிக்காய், சாதிபத்திரி, நெரிஞ்சி
வேர், இலவணபாஷின், முசுமுசுக்கைவேர், நாகப்பூ.

தேவதாரம் இவையெல்லாம் சமனாகக் கட்டி சூரணம் பண்ணி இதுக்கு சரிசமன் சர்க்கரை கூட்டி கலந்து கொள்ளத் தீரும். வியாதி பயித்தியதாகம், சூலை, எரிவு கை, கால்எரிவு இவையெல்லாந் தீரும்.

ஓமம், பெருங்காயம், வாய்விளங்கம், பஞ்சலவணம், திரிகடுகு, திரிபலை, செவ்வியம், சித்திரமூலம், திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, முத்தக்காசு, கடுகுரோகணி, நற்சீரகம், கருஞ்சீரகம், கோட்டம், கண்டங்கத்திரிவேர், வெட்பாலைஅரிசி, பெருந்தலைவேர், சிவதைவேர், ஈசுர வேர், பொன்முசுட்டைவேர், பாலைவேர், சிறுதேக்கு, சத்தியசாரம், நவச்சாரம், வசம்பு, மஞ்சள், மர மஞ்சள் சமஅளவு கூட்டி சூரணம் பண்ணி இந்த சூரணம் கொண்டத்தில் ஒன்று பாதி சர்க்கரை கூட்டிக் கலந்து கொள்ளவும் தீரும் வியாதி சீதவாதம், அஜேகம்,
349 உதிரவியாதி குன்மம் பயுமலம் பாண்டு மந்தாக்கினி காச்சவாதம், அரோசிகம், வாந்தி கிருமிகள் அஜீரணம் விக்கல் முதலான சர்வ வியாதியுந் தீரும். சர்க்கரை இல்லாவிட்டாலும் சூரணம் கொள்ளலாம். உஷ்ண ரோகம் காசம் வாந்தியுடனே உடனுக்கு சர்க்கரை கூட்டிக் கொள்ளவும்.

(350, 351 இரு ஓலைகள் காணவில்லை)

352. ## பாசிகண்ணுக்கு

எட்டிக்கொட்டை கொண்டு
வந்து ஒரு புது சட்டியாலே மணலைப் பரப்பி எட்டிக்
கொட்டையை சுற்றிலே பதிச்சு நடுவே கிளிஞ்சி
ஒன்று வைத்து கிளிஞ்சு மேலே ஒரு கொட்டைப்
பாக்கு சுற்றிலே துருசு வைத்து அடுப்பாலேத்தி சிறு
தீயா எரித்து அதின் பிறகு மணல் கொதிப்பதித்து
ஒரு எலுமிச்சம் பழத்தை நடுவால் பிளந்து கொண்டு
கையால் பிழிந்து கொண்டு அடுப்பு மேலே துருசு
மேலே இப்படியாக துளியாய் சுவறச்சு வாரிப்பூவும்.

பாசிகண்ணுக்கு

துருசு நீர் வற்றியவுடனே
உடனே எடுத்து சுத்தியா இருந்த எட்டிக்கொட்டையை
எடுத்து ஒரு ஊதை நாளாய்ப் பிழிந்து ஊதையை
திரும்ப பொன்னிறமாய் வறுத்து இதுடன் முன்
சுத்திசெய்த துருசுடன் சுட்டுப் பொடிகளப்
பொறுத்திட்டு பசுவின் வெண்ணைய் போட்டு
செம்பு கொண்டு அரைத்து சிமிழில் வைத்துக்
கொண்டு கண்ணில் மைபோட பாசி கண்ணோவு
தீரும்.

திருகுகள்ளி கோர்ப்பட்டை பசுவான்பாலில்
திறமுடனே அரைத்துவரையாவை வைத்துக்கொண்டு
பெருகிட வெகுதநாளில் நாளிதான் முசுகெப்போ
பொறவே மருநாள் அதிகாலந்தால் பாறபன்
பரம்பருந்து பாக்குடன்தான் நின்னைப்
பயப்படவே தான்கமுந்து மீறு மாகில்
பருவமசம் பால்கஞ்சியது உளமா புள்கொண்டு
மற்றுமுள்ளபடி யருந்தால் சுந்தனந்தைப் பூச்சே

அப்பிரக செந்தூரம்

கிருஷ்ண அப்பிரகத்தை ஒரு ஓட்டின் மேலே வைத்து கொல்லன் உலையின் மேலே அந்த ஓட்டை வைத்து ஊத அப்பிரகம் சிவந்த பிறகு இதை நெல்லிக் காய்த் தண்ணீர் புளிச்ச காடி பசுவின் மோர் இம் மூன்றும் கலந்து காச்சி அப்பிரகத்தை அதில் போடவும் இப்படி சிவக்க காய்ச்சி முக்கால் போடவும். அதின் பிறகு எடுத்தும் அப்பிரகத்தை சாக்கட்டி உரத்தி சீலை -யால் கட்டி ஒரு தாளி தண்ணீர் விட்டு அதில் தொங்கம் பண்ணவும். அதில் தெளிந்த தண்ணீரை இறுத்துப் போட்டு அடி மண்டியைச் சீலையில் கட்டித் தூக்கி வைக்கவும். அதின் பிறகு சிவந்த பாடத பளிச்சாறு விட்டு ஒரு சாமம் அரைத்துக் நசுக்கு அரை வராகன் மந்தத்தில் நசுக்கு போலே பண்ணி சீலையட உலர்த்தி பிறகு வட்டமாக நச்சுக் கோலால் ஒன்றாக கால் ஒசாத்தாலே மண் வைத்து

நாலு திக்கும் மூன்று வாரமாக பன்னிரெண்டு
தூளமாட்டுப் பாதிக்குள்ள மட்டும் ஒரு எருமுட்டை
அடுக்கி அதின் மேலே ஒரு கற்றாழையைப் பரப்பி
ஒவ்வொரு (பருப்பு) அங்கப் பருந்தி அதின் மேலே அப்பிரகத்தை
வைத்து அதின் மேலே எருக்கிலைப் பரப்பிக்கொண்டு
மூடி அதின் மேலே எருமுட்டை அடுக்கி மேல்வாய்
கலந்தரைத்து மண் பூசி புடம் போடவும்.
மூன்று நாளைக்குள் எடுத்து அந்த படிக்கி சிவந்தலாடி
தழைச்சாறு விட்டரைத்து அடை தட்டி
முன் உலர்த்தின மாதிரிகாரம் புடத்தில் [illegible]ந்த
படிக்கி நாலு மாதிரிகாரம் புடம் போடவும். ஒவ்வொரு
புடத்துக்கு மேல் மண்ணிலே ஒவ்வொரு ஓட்டை
தள்ளப் போடவும். இந்த மாதிரிகாரம் நாலு புடத்திலே
செந்தூரமாம். இதை சிவந்தப் பசுமி இலையும் சிவந்த
பொடுதலைச் சாற்றிலும் மாறி மாறி அரைத்து
அடை தட்டி உலர்த்தி புது சோட்டில் வைத்து
மேலோடு கொண்டு பொருந்த மூடி 21 புடம் போட
செந்தூரமாம். அனுபானம் வியாதி அறிந்து கொடுக்கவும்.
செந்தூரம் முற்றும்.

~~[illegible]~~
~~[illegible]~~
?
~~[illegible]~~
~~[illegible]~~

மருவாய வாய்வு குன்மம்
வாத குன்மங்க ளோடு
சுருவாய மாந்த குன்மம்
தானோ குன்ம மாகும்
பாவாய வலய குன்மம்
பரந்தெழு சுத்தி
வாரவாய அய்ய குன்மம்
யானைகட்டு பகிரு ஒன்னே

வாய்குன்மம்

சோறுதானும் செல்லாது
- . - உண்டுதானும்
உதரம் பல்லுந்தான் கெடுக்கும்
உடலும் . . . . . .
- . . . .
- - . - . - - . .
யேறுவாயு குன்மம் மொன்று
இசைந்தோர் சொன்னார் தானே

மருந்து

காள நாள்ன்னை வெள்ளாட்டுப்பாலுடன்
மருவாய எருக்கம் பாலுடன் வளமான நொச்சியும்
? முாபால் சுறாண்டையும் வகைக்குளக்காய்த்தனைப்பாக
மாந்திப்பலைகுல . . . . . அக்குடன் பாவு திப்பலி
செ... பகிரு சித்திரமும் மலமொன்று கூட்டியே
பதமாய் இடித்திடித்து தாகமாயுள் கொண்டு மேலுக்கும்
பூசவே சகலவாயுவ குன்மங்களும்

தொயாதே ஊட்டோடுமண்டபஸ்ப கொண்டிக்கல்
சகாது நருக்களுக்கு தன்னை ஏகமாயாவைத்தான்
குறைமை கிம்பமாக்கிய வேண்டி கிரம்பேற
நல்லோர்கள் உண்மையுடன் உறுவான் அன்புடனிருந்து
வாக்கே.

வாதகுன்மம்

சீருடைய நடைகுறைய வாவாறாகு
திகள்தோறும் கடுக்குமைத் தியொதமுண்டாம்
பெருடைய உடல் கூறுக்கும் பலங்கேடாகும்
பேசொண்ணா நாவறளும் தானேராகும்
பெருடைய வாதகுன்மம் உலகயீதான்று
புகழ்வாயோர் பாப்புவாயல் புகழுவாரே

மேலான கொடிவேலி ஊட்டுத்திருப்பணையும் கீழ
மேர்வையுடன் பொடிமணி சுதிரக் கள்ளிப்பால்
கூடவே வாதத்தரைத்து மகை நார்த்தங்காயவிலைய
மாகவேட் கீறி வேதிரைத்து நற்சுட்டி அதனர்
ரூபவுடன் மூடி மதைத்திடுவகள் நாலநாளோடு
அரைத்து நன்றாய உலர்த்தி வைத்து வாக்கியே

—

நயந்து பொருகடி கொண்டிடக் கோல்புடனெழுகின்ற
பாதகுன்மந் தன்னை . . . நாட்டுமிக்குறுதாகநான்
கொண்டாடு மெய்யுருவாயல் பெரியோர்கள் சொல்லுதனை
உறுவேர்க் காயந்தோர்க்கே.

சிலேத்தும குன்மம்

பாயுதிரு மலைப்பண்டாம் பித்துடனும் படிவாயுமுந்
357. தானே யுரைக்கும் வாலன் கெடுக்குந் தன்னும்
அசனந்தானையடக்கும். உள்ளே நெஞ்சு மகைப்
புகையும் உளவை நடுக்குமுடன் நோகும் - சேத்தும
குன்மம் மென்றே உள்ளோர் சொல்லும் மதுவே

மருந்து

செய்ய சித்திரமூலம் வெள்வெலம் பட்டை சோலை
யிருமது பலம் திகைக்காக வென்தூணி மத்துக்கு நீர்விட்டு
இரத சேரவே போட்டெரிந்து துய்ய கசாயம்
எட்டி லொன்றாய் சுண்டி நல்லவெண்ணெய் நாழி
திருவா புளிந்திடுந் தேங்காய் பாலு நாழி
தொன்னூறு பழமச்சின் கனிவெய்ய சாறுடன்
நாழி வெள்ளுள்ளி திசசமடன் உராகவே யளந்து
மென்மையுடன் திரைமுன் கழுஞ்சு எண்ணெய்
கொண்டிட மெழுக்கி தான் மருகவும்.
பய்யவே உருகின்ற சேற்றும குன்மங்கள் படர்
மஞ்சமாகவே மாமணிச் நல்லோர்கள் மிக்குறுதாக
பாத்துரைக்கின்ற பாரே

ரத்தகுன்மக் கிரணம்.

மஞ்சணிறம் போலுமுக மாகும்
வாந்தி யுண்டாமா மறுக்கும்
நெஞ்சலை மசைவே கொளுகட்டும்
நெருப்பா யெரிக்குமுட லெல்லாம்
அஞ்சுமாம் வெய்யிறனைக் கண்டாலு
அரவே சமுத்திரனை வலக்கும்
செஞ்சோரி ரத்த குன்மமென்று
358. தேறவோர் சொல்லுந் திறமதுவே

கருதிய சக்குடன் மாதுதிப்பாலி கடுக்காய், நெல்லி
சீனி ஏலங்கம், காக்கோசுட்டம், சேமருடன்
லவங்கப்பட்டையும் காவலங்கப் பத்திரியும்
மருவுடன் ரோகணி முத்தமதிரசனடயும் வாளமாய்
சமன் கூட்டியே மன்றுசாக் சூரணம் பொடி பண்ணி
3கு உறுமருவு சிவனதவேரினால் பெருகவே பாவனைச்
சுத்தி செய்யதே இந்த சூரணமும் தூவுடன்
பேணியே பொடி செய்து இனைவென்னிரால்
சக்கரை பேரான கற்கண்டு சேர்கட கொண்டிடப்
போதிக்கும் பயறுகள் மேலடும் ரத்தகுன்மம்
ஓட்டோடிடும். அயபஸ்தி சூரணந்தன்னை
வரைந்துடன் கொள்ளுவோர்க்கே.

வாதகுன்மம் குணம்

வயிற்றதனைக்கும் குடல்குமட்டும் வாய்நீர் சுரந்திதனை
வாக்கும். உவாறப்பமை யதிய கிறுகிறுக்கும் ஏங்காரம்
அறந்தேப்பமதாய் மயிர்கால்தோறும் வேர்வைவரும்
வயிறுபொருமல் காந்திறையும் மயத்தைக் கெடுக்கும்
உடல்இளைக்கும் மயக்கிய வாதகுன்மம் தானே

மருந்து

வாளமையுடன் நாவல்பட்டை பத்துப் பங்குடன்
359. வாக்கடுக்காய் நல்லதாய் மன்றும் பலமைந்துடன்
இடித்ததைப் பொடி பண்ணி மருந்து மூத்திரத்தில்
தீராமலே உறப்போட்டிருப்புக் கிட்டுந்
தானதில் பொடி அரயதாய் தனயவே மூன்றுநாள்
ஊறி பெலக்கப் பட்டுந்தானட்டு பொடி பண்ணியே
பாகு சக்குடன் பொடி திகைக்குமங்காவே மென்மை
-யிய்ப் பொடிகள் பண்ணி மேவு இந்துப்புடன்
காந்தம் வனைக்கொரு பலமாய்க் குட்டவே
இனியமல் மோருடன் சோறுண்டு காகிடந்
தானினால் கொள்ளவே வாதகுன்மந் தீர்ந்திடுமா யுறு
வெந்ததினை யவிதை கூறுவோர்க்கே.

சத்திகுன்மம்

தீபன மயக்கமோடு செங்கிறு வலியுமுண்டாம் - வாய்ப்பு
வாந்தியாகும். பால்லிகெடும் வம்பாடாது அதுமன

நாடியுங் குன்றுமனைந்தல் மேல்மிகை உண்டாகும்.
கோபமாஞ் சூத்திரகுன்மம் குணங்களை குறித்துச்
சொல்வோம்.

மருந்து

சீலமாகும் ஊசிலைவேர், கொடிவேலி, சங்கம்வேர்
சாந்தரு முவாயிப் பட்டையுந் தக்கதோர் குறிஞ்சாக்
கிழங்கு காஞ்சிவேர் தந்தகமைய யானைக்கள் பகு
நலமாகும் ஊசிலைவேர் பாதி இவ்வகையெல்லாம்
நன்றாகவே இடித்து நாழியே கசாயங்கள்
யெட்டொன்றாக்கவே நலம்பெறக் காய்ச்சியதின்
குளமுத்த நன்றாய் வடித்து இதில் கற்கவகை
சொல்லுவோம் வகையாகவே —

சுக்கு அஞ்சு பலமுடன் மாடு,
திப்பிலி பலந்துய்ய இந்துப்பு டனையோவ வசியோமம்
இருசீரகம் யானைவரளம் வகைக்கால் பலம் - ஏற்றிடுங்
குரளிஞ் சார் தளாட்டு அயன் நாமுறு ருப்புடனே
நேரான நேருடன் நல்ல ஆவண்பால் . . . . . .
ஒருபடிய நாறுந்த கருடன் நல்லெண்ணெயும் எருமைச்ச
கனையுடன் இஞ்சியும் . . . . சீரான
பனைவெல்லம் பத்து பலந்துடன் சேரும்.

குன்மத்துக்கு லேகியம்

வெள்ளுள்ளி நாளியுந் தப்புமே
லேகியம் பண்ணியே தினமும் முக்கழஞ்சு கொள்ளவே
தீராத வாதகுன்மம் சிறுவலிகுன்மமும் - சிறந்த
வெள்ளைக்காளமுஞ் சேரும் - வாதபாகமோடு
பாண்டு ருசுங் காமாலை தீராத கிராணிகளுடன்
பாரோ மதிக்கவே இவ்வகை நோயெல்லாம் பணியின்
36. முன்னர்பனி போலாம் பகரும் ஆயுறு வேந்தர் கடமை
-மையை பகர்ந்துரைக்கின்ற பாரே -12-

வலிகுன்மம் குணமருந்து

காயநின்றும் வயிறாதும் கருகி மேனிகருந்தாயும்
ஆய வயிறு மிக வரைந்து அடுத்த வாய்வு முழுப்போலாம்
தூய நடையும் மிககுறையும் சோறு மிகவும் செல்லாது
மாய வலிகுன்மமென்றே வல்லோர் சொல்லும்
வகையதுவே - 13-

மருந்து.

நாயுருவி நீர்முள்ளி வகையரு நாளியாய் தற்சாம்ப
லாக்கி இதினை நற்றும் 16 படி நீரினிற் கரைந்தொரு
வாருறு வாட்டு எடுத்து ஆய படியடம் தை நாளிய்
காய்ந்தபின் அதன் உதிர்பின் குறுணையாய் அடவாக
நீர் தாணிவாட்டு இதினை பன்பாக தாளியாக்கி

காய் நன்றாய் வைத்து வெள்ளுள்ளி கொடிவேலி
கருதும் ஆல்லங்களுடனே காணவே பருவோகளா
உளகையற் பலங்கருணையுடனாகவே - தூய
நன்னாரி இடித்துத் தாணாநீரல் தன்னில்
வைத்துலங்கவே யெட்டி லொன்றாய் சுவறவே
காய்ச்சியே இவையெல்லா மொன்றாக்கச் சொல்லு
மாகு இந்துப்புடன் ——

(362, 363 இரு அடிகள் காணவில்லை)

44. குறுணி நாநாமதி நீர்வாட்டு எட்டிலொன்றாய்
காய்ச்சி யாறுத்துக் கொண்டு இந்தின கசாயத்துடன்
கலந்து பசுவின்பால் முன்னாழி நெய் நாழி உழக்கு
வாட்டு இதுக்கு கற்கம் தேவதாரம், வாலாவரிசி,
அமுக்கராவேர், முந்திரிக்காசு, கடுக்காய், இமகம்,
கருஞ்சீரகம், அதிமதுரம், திப்பிலி, அரத்தை, கற்கடக
சிங்கி, சிறுதேக்கு, காற்காகோளி, சீரகாகோளி
சுக்கு, முந்திரிகைப்பழம் இவை ஒரொன்று கழஞ்சு
தட்டி கடைச்சரக்கு எல்லாம் பால்வாட்ட
-ரைத்து நெய்யுடன் கலந்து பதத்தில் வேக வைத்து
வடித்துக் கழஞ்சு நெய் உள்ளே கொண்டும் ஆதும்
சயரோகம், கடகாரை இருமல் இதையெல்லாந்தீரும்.
இதுக்கு பூரணம் கொண்டுவர வேணும்.

இருமலுக்கு சூரண மருந்து

திரிகடுகு, தான்றிக்காய்,
நெல்லிமுள்ளி, இவை மூன்றுக்கும் பலம் -க- கொண்டு
நந்து இடித்து வஸ்திரகாயம் பண்ணி இதில்
தூதுவளை வேர் பொடி அஞ்சு பலம் கூட்டி ஒன்றாக
கலந்து வெருகடி அளவு தேனில் அதிகாலை சாப்பிடவும்.
அந்தி நேரம் நெய் கொண்டு வரவும். பத்தியம் வேண்டாம்
இந்தப்படி கொண்டு வர கஸம் இருமல் தீரும்.

365.

செம்பாரண்டைக்கிழங்கு
வசம்பு ஈர வெங்காயம் விளக்கெண்ணெயில்
அரைப்படியில் வெந்துக் குடிக்கவும் மூன்றுக்கும்
போடவும். மூன்று நாளும் கீரைப்பூச்சி இறங்கும்

ரத்தபாந்தத்துக்கு

தென்னம்பாளைப்பூ உதிர்ந்து
போட்டு இறுத்தெடுத்த கஷாயம் பண்ணி அதில்
கொத்தமல்லி, ஏலம், சீரகம், தாளிச பத்திரி, சந்திரிகை
பதும், அதிமதுரம் இது வகைக்கு ஒரு வராகனெடை
அரைத்து கஷாயத்தில் கலக்கி குடிக்க ரத்தபாந்தம்
தீரும்.

[illegible] ஆலம்பாலு அரைத்து ஒரு எலுமிச்சக்
காய் அளவு காலையில் கொடுக்க ரத்த பாத்தம் தீரும்.

தலைவலிக்கு

நல்லெண்ணெய் ஒரு படி எருக்கன்
தாளச்சாறு கால் படி இலவங்கப்பட்டை கால்
வராகனெடை மஞ்சள் கால் வராகனெடை மிளகு கால்
வராகனெடை சாறு விட்டு காய்ச்சி கடுகு
பதத்தில் இறக்கிக் கொண்டு தலையில் தேய்த்து
உளுஞ்சல் பட்டை போட்டுத் தலை முழுகவும். தலை
நோவு நிவர்த்தி கண்டது

366 ## பாம்புகடி, தேள்கடி, எலிகடி

வெள்ளை பாஷாணம் வராகனெடை 4,
அரிதாரம் வராகனெடை 2, கெவுரி வராகனெடை 1
சுண்ணாம்பு வராகனெடை 3 சுத்தி பண்ணிக் கொண்டு
எருக்கன் பால் வார்த்தரைத்து மிளகு அளவு உருண்டை
பண்ணிக் கொண்டு பாம்பு கடிக்கு தண்ணீரில்
கொடுக்கவும். தேள் வாதத்துக்கு நாயுருவி நீச்சு தண்ணியில்
கொடுக்கவும். கடிவாயில் எருக்கன் பால் உரைத்துக் கடி
வாயில் பூசவும் எலிகடிக்கு வெள்ளாட்டுப் புக்கை
பாலில் உரைத்து ஒரு உருண்டை கால் மண்டலம்
கொடுக்கவும். நாள்மோருக்கு மோரில் ஒரு உண்டை
உரைத்து கொடுக்கவும். இதுக்கு சுத்தி சொந்தன்

~~[illegible]~~

வாழை மடலும் 3 கொண்டு வந்து வெள்ளை பாஷாணம்
ஒரு மடலுக்குள் கெவுரி ஒரு மடலுக்குள் அரிதாரம் ஒரு
மடலுக்குள் மடலுக்குள் நடுப்பாற மடலுக்குள் வைத்து

மூன்று பதார்த்தமும் சீலையால் கட்டிக் காடி அரைப் படி
வார்த்து அதிலே டோலையந்திரமாய் கட்டி நடுக்காடியில்
நிற்கிறாப் போலே கட்டி ஒரு நாழிகை வேக
வைத்து அந்த பதார்த்தம் எடுத்து மருந்தை எடுத்துக்
கொண்டு கருவாய் போட்டுச் சட்டியை வைத்து
367. எலும்பக்கும் சாறு ஊட்டு அடுப்பேற்றி வெல்லத்தை
உருத்துக் கொள்ளவும். அதின் மருகு பசுவின் பாலில்
வெல்லத்தை உருத்துக் கொள்ளவும் சூத்திரம் பாம்பு
கடி, தேள்கடி, மகாசுநாய்கடி, மகாசூனாய்
செய்யான் கடி, நல்லமாறாத் தீத மண்டலம் கடி
உரைத்துக் கொள்ளலாம் ஆகும். மந்திரம் வெள்ளீர் கோறு
நீரு மோரு மந்திரம்.

அங்கலமைப்புக்கு

மாரண்டைச் சாறு, வெண்காரம்
கால்பணவிடை, தினிக்காரம் கால்பணவிடை பொரித்து
கொதிக்க வைத்துக் கொள்ள இருவாய் கட்டுந் தீரும்.

குன்காசுக்கு

சுண்டைச் சாறு பிழிந்து அங்கார
-கஞ்சு கட்டி கொடுக்கவும்.

ஏகுன்மத்துக்கு

பச்சைப்பயறு காட்டுமல்லி
தளையும் இரண்டும் கஷாயம் வைத்து கஷாயத்தில் சக்கரை
போட்டுக் குடிக்கவும் தீரும்.

அந்நாம் [illegible] சோறு உள்ளிருபாடி கவிது